# அரையாண்டு பொதுத்தேர்வு, டிசம்பர் 2017 – மதுரை மாவட்டம்
# 11 ம் வகுப்பு கணினி அறிவியல் விடைக்குறிப்புகள்

| | | |
|---|---|---|
| **பகுதி அ**<br>**சரியான விடையைத்தேர்ந்தெடுத்து எழுதுக.** | | |
| 1 | b | ஜான் நேப்பியர் |
| 2 | c | மூன்றாம் |
| 3 | a | 8 |
| 4 | b | வருடி |
| 5 | a | 2 |
| 6 | a | 7 |
| 7 | c | Delete |
| 8 | b | Alt+F4 |
| 9 | c | 256 |
| 10 | a | # |
| 11 | d |  |
| 12 | c | Ctrl+D |
| 13 | c | Change Directory |
| 14 | b | scanf |
| 15 | d | டென்னிஸ் ரிட்சி |
| | **பகுதி ஆ 2 மார்க வினா (வினா எண் 24 கட்டாய வினா)** | |
| 16 | **புறக்கருவிகள்** : கணிப்பொறியுடன் இணைக்கப்பட்ட உள்ளீட்டு, வெளியீட்டுக்கருவிகள் புறக்கருவிகள் எனப்படும். | |
| 17 | **இருநிலைக்கூட்டல் விடை** : 11011001+1011101 = 100110110 | |
| 18 | **பல்நிரல் செயலாகக்கம்** : பல பணிகளை கணிப்பொறி ஒரே சமயத்தில் செய்வது பல்நிரல் செயலாக்கம் எனப்படும். | |
| 19 | **ப்ளிப் ப்ளாப்** : கொடுக்கப்பட்ட ஒரு பிட்டை நினைவில் வைத்திருந்து அடுத்த நேரக்கூற்றில் கொடுப்பது ப்ளிப் ப்ளாப் ஆகும். அதனால் இதனை நினைவகத்துளி எனலாம். | |
| 20 | **WAN** : உலகில் உள்ள பல கணிப்பொறிகளை இணைத்து உருவாக்கப்படுவது பரந்த வலை (Wide Area Network) எனப்படும். | |
| 21 | **பிடிப்பலகை** : நகலெடுக்க அல்லது நகர்த்த வேண்டியத் தகவலைத் தற்காலிமாக சேமித்து வைக்கும் இடமாக பிடிப்பலகை பயன்படுகிறது. இதில் ஒரே நேரத்தில் 24 வேறுபட்ட தகவல்களை சேமித்து வைத்துக் கொள்ள முடியும். | |
| 22 | **While( ) do…while கூற்று வேறுபாடு** : While கூற்றில் நிபந்தனை முதலில் பரிசோதிக்கப்படுகிறது. do…while கூற்றில் நிபந்தனை இறுதியில் பரிசோதிக்கப்படுகிறது. While கூற்று நுழைவு சோதிப்பு மடக்கு எனப்படும். do…while கூற்று வெளியேறல் சோதிப்பு மடக்கு எனப்படும். | |
| 23 | **கோப்பின் பெயர்** : கோப்பின் பெயர் இரு பகுதிகளை கொண்டது. **1.** முதன்மைக்கூறு– கோப்பு பெயரின் முதல் பகுதியாகும் **2.** நீட்டிப்புக்கூறு – புள்ளிக்கு பிறகு வரும் பகுதியாகும். | |
| 24 | **இயக்க அமைப்பு** : கணிப்பொறியின் ஒவ்வொரு சிறு பகுதியும் எப்படி செயல்பட வேண்டும் என்று கூறுகிறது. கணிப்பொறிக்கும், பயனுருக்கும் இடையே ஒரு இடைமுகமாக செயல்படுகிறது.<br>எ.கா. விண்டோஸ், டாஸ், லினக்ஸ் | |
| | **பகுதி இ 3 மார்க வினா (வினா எண் 32 கட்டாய வினா)** | |
| 25 | **தரவு, தகவல்** : பல்வேறு வகைகளிலும் திரட்டப்படும் அடிப்படை செய்தி துணுக்கு தரவி எனப்படும். பொதுவாக தரவு என்பது நினைவில் வைக்கப்பட்ட செய்திகள், நேரடி பயன் தராதது ஆகும். | |

| | |
|---|---|
| | பல்வேறு வகைகளிலும் பெறப்பட்டதாகும். தரவுகளின் தொகுப்பு தகவல் எனப்படும். பொதுவாக தகவல் என்பது ஆராய்ந்து உருவாக்கப்பட்டவை மற்றும் நேரடி பயன் தருவது ஆகும். தரவுகளிலிருந்து மாற்றிப்பெறப்பட்டவை தகவல் ஆகும். |
| 26 | **பூலியன் தேற்றம் நிரூபித்தல் :** A+AB = A |

| A | B | AB | A+AB (LHS) | A (RHS) |
|---|---|---|---|---|
| 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 0 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 | 0 | 0 |
| 0 | 1 | 0 | 0 | 0 |
| 1 | 0 | 0 | 1 | 1 |
| 1 | 0 | 0 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 |
| 1 | 1 | 1 | 1 | 1 |

| | |
|---|---|
| 27 | **வெளியீட்டகம்** : கணிப்பொறியிலிருந்து வெளிவரும் தகவல்களை வெளியிட உதவும் சாதனங்கள் வெளியீட்டுச் சாதனங்கள் அல்லது வெளியீட்டகம் எனப்படும். எ.கா. திரையகம், அச்சுப்பொறி, வரைவி, ஒலிபெருக்கி |
| 28 | **இயக்க அமைப்பின் விரும்பத்தக்கத் தன்மைகள் :** 1.பயனர் இடைமுகம் 2.நினைவக மேலாண்மை 3.பணிக்கூறு மேலாண்மை 4.கோப்பு மேலாண்மை 5. வலை அமைப்பு மேலாண்மை 6. பாதுகாப்பு மேலாண்மை 7. பரவல்முறை இயக்கம் 8. பிழைபொறுத்தல் |
| 29 | **URL** : ஒவ்வொரு வலைத்தளத்திற்கும் தனி முகவரி உண்டு. அது URL எனப்படுகிறது. எ.கா. http://www.padasalai.net இங்கு http என்பது Haper Text Transfer Protocol என்பதன் குறுக்கம் ஆகும். |
| 30 | **RUN கட்டளை** : RUN கட்டளை பயன்பாடுகளை இயக்குவதற்கும், தகவல் கோப்புகளைத் திறப்பதற்குமான மாற்று வழியைத் தருகிறது. Start→Run என்றத் தேர்வை கிளிக் செய்து RUN கட்டளையைத் தொடங்கலாம். |
| 31 | **லினக்ஸ் கட்டளைகள்** : 1. Cat கட்டளை – கோப்பின் உள்ளடக்கத்தை வெளி கொணர Cat கட்டளை உதவுகிறது. 2. Cp கட்டளை – ஒரு கோப்பின் உள்ளடக்கத்தை, வேறொரு கோப்பில் நகலெடுக்க உதவுகிறது. 3. rmdir கட்டளை – கோப்பகத்தை நீக்குவதற்கு rmdir கட்டளை உதவுகிறது. |
| 32 | **பாய்வுப்படம், போலிக்குறிமுறை வேறுபாடு** : 1. கணிப்பு நிலை பாதைகளின் பாய்வுகள் படமாக உருவகிக்கபடும். போலிக்குறிமுறை ஆங்கில மொழித்தொடருக்கும், கணிப்பொறி உயர்நிலை மொழிக்கும் இடைப்பட்டது 2. பாய்வுப்படங்களை புரிந்து கொள்வது மிகவும் கடினம். போலிக்குறிமுறையை புரிந்து கொள்வது எளிது 3. சிக்கல்களுக்கான பாய்வுப்படங்கள் பல பக்கங்களை எடுத்துக் கொள்ளும். சிக்கல்களுக்கான போலிக்குறிமுறை சில பக்கங்களே எடுத்துக் கொள்ளும். |
| 33 | **வில்லைகள்** : சி மொழியின் அடிப்படை இனங்கள் ஒட்டு மொத்தமாக இணைந்து வில்லைகள் என அழைக்கப்படுகின்றன. வில்லைகள் மாறிலிகள், குறிப்பெயர்கள், நிறுத்தற்குறிகள், சிறப்புச்சொற்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. |

***********